திசம்பர் - 2012

திருவள்ளுவர் ஆண்டு 2043

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 57
பகுதி : 2

விலை ரூ. 10/-

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

02-12-2012 அன்று மதுரைத் தமிழ்ச்சங்க நிறுவனர் வள்ளல்.பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்களின்
101ம் நினைவு நாளை முன்னிட்டு தமிழ்ச்சங்கச் சாலையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு
இருபெரும் செயலர்கள் மற்றும் கல்லூரிக்குழுத் தலைவர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 57 திங்கள் இதழ்

பகுதி : 2 திருவள்ளுவர் ஆண்டு 2043

திசம்பர் 2012

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

பொருளடக்கம்

திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறி முறைகள்	சித்தாந்த நன்மணி முனைவர். கா. அரங்கசாமி	4
ஒப்பிட்டு நோக்கில் காப்பியங்களில் கிளைக் கதைகள்	ச. கொடியரசு	15
அழகு	புலவர் சி. பாண்டுரங்கன்	24
திருவள்ளுவரே சிறந்த மருத்துவர்	ஆறுவிரல் ஐம்பொறி	25
தமிழர் மரபு வழி வேளாண்மை	ப. பாலமுருகன்	27
நீதியின் கவனத்திற்கு நீதி நூல்கள்	சா. இளையராஜா	31
கள்வனுக்கு உதவிய வள்ளல்பெருமான் !	கவிவேந்தர் கா. வேழவேந்தன்	35
தமிழ் – ஆங்கில உடம்படுமெய் கருத்துப் பரிமாற்றத் தொடர்ச்சி	தமிழாகரர் தெ. முருகசாமி	36
குறுந்தொகையில் மன்னர்கள்	து. அசோகன்	39

இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

திசம்பர் மாத செந்தமிழ் இதழை அறுபெரும் அறிஞர்களின் ஆய்வுக் கருத்துகளோடும், நல்ல மரபுக் கவிதைகளோடும், தங்கள் கைகளில் தவழ விடுவதில் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் பெருமையடைகிறது. திருவள்ளுவரை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள முனைவர் கா. அரங்கசாமி அவர்களின் 'உரை காணும் நெறிமுறைகள்" மிகச் சிறந்த அளவு கோளாக அமைவதை எண்ணித் தமிழர்களாகிய நாம் இரும்பூதெய்தலாம். இளங்கோவடிகளும், சாத்தனாரும் எடுத்தாண்டுள்ள "கிளைக் கதைகள்" எவ்வக் கோணத்தில் படைக்கப்பட்டுள்ளன என்பன பற்றி ச. கொடியரசு அவர்கள் ஒப்பிட்டிருப்பது பாராட்டிற்குரியது. திருவள்ளுவர் தலைசிறந்த மருத்துவர் என்று ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் பாராட்டி மகிழ்கிறார். சுற்றுச்சூழல் அமைப்பிற்குக் கேடு விளைவிக்காமல் "தமிழர் மரபு வழி வேளாண்மை" விளைவிக்கப் பெற்ற பாங்கை ப. பாலமுருகன் அவர்கள் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். மனிதன் நிம்மதியாக வாழ நேர்மையான நீதி கடைபிடிக்க வேண்டும் என்ற கருத்தை மையமாகக் கொண்டு சா. இளையராஜாஅவர்கள் "நீதியின் கவனத்திற்கு நீதி நூல்கள்" என்னும் ஆய்வுரையைத் தந்து மகிழ்விக்கிறார். காவலராகவும், பாவலராகவும் வாழ்ந்து வரலாறாகிய மன்னர்கள் பற்றி குறுந்தொகையை அடிப்படையாகக் கொண்டு து. அசோகன் அவர்களின் கட்டுரை இனிவரும் இதழிலும் தொடர இருக்கிறது. மேலும், பாண்டுரங்கனின் "அழகு" கவிதையோடும், வேழவேந்தன் அவர்களின் மரபுக் கவிதையோடும், வாசகர் வாசகங்களோடும் செம்மாப்போடு இம்மாத இதழ்....... இதோ ! இதோ !

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறி முறைகள்

(தொடர்)

5. அயலவர் எதிர்புக் கோட்பாடுகள்

சித்தாந்த நன்மணி முனைவர். கா. அரங்கசாமி
கோபி

முன்னுரை

தமிழ் மொழி 50,000 ஆண்டுகட்கு முன் தோன்றி வாழும் செம்மொழி உலக மொழிகளின் தாய்மொழி எனத் தகுதி பெற்றது. இன்றும் உலக மொழிகளில் 300க்கும் மேற்பட்ட மொழிகளில் தமிழ் உறவுப் பெயர்களும், 1700 மொழிகட்கு மேலாகத் தமிழின் வேர்ச் சொற்களும் உள்ளதை அறிதல் வேண்டும். இந்திய மொழிகட்கும் வட இந்திய மொழிகட்கும் சிந்துவெளி நாகரிகத்துக்கும் தமிழே அடித்தளமாக அமைந்துள்ளதை அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். வட அமெரிக்க மெக்சிக்கோ மயன் நாகரிக மக்கள், தென் அமெரிக்கப் பிரேசில் இன்காப் பழங்குடி மக்கள் இன்றும் தமிழ் பேசுவதைக் காணின் மேற்கூரிய உண்மைகள் உறுதிப்படும். ஆப்பிரிக்க மொழிகள் மற்றும் சீன, யப்பான் மொழிகள் தமிழில் இருந்து கிளைத்தவை என்ற உண்மையும் இன்று உறுதிப்பட்டுள்ளன. இடைக்காலத்தில் தமிழர் அடிமைப்பட்டுக் கிடந்த போது சமசுகிருதத்தை வேதமொழி – தேவமொழி என்று பொய் கூறி ஏய்த்தனர். (இன்றும் ஏய்க்க முயலுகின்றனர்) திருக்குறளில் அயலவர் எதிர்பா? என மயங்குவது புரிகிறது. இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நந்நயம் செய்தல் என்ற திருவள்ளுவரா எதிர்க்கின்றார் என்ற ஐயம் வருதல் இயல்பு. சமசுகிருத வாணர்கள் அவ்வளவு கொடியவர்கள். தமிழரின் அறவியல் மெய்யியலையும் பண்பாட்டையும் பதிவு செய்த திருவள்ளுவர் வேறு வழியின்றி அயலவர் எதிர்புக் கோட்டையும் பதிவு செய்துள்ளார். அவர் கண்டிக்கின்ற அனைத்தும் தமிழர் அறவியல் மெய்யியலுக்கு மாறுபட்டவை அனைத்தும் அயலவர் எதிர்ப்பே. இன்று தமிழும் தமிழரும் அனைத்தையும் இழந்து நிற்பதற்கு இந்தக் கேடே காரணம்

என்பதை நாம் உணர்தல் வேண்டும். உரையாசிரியர்கள் பலர் காலக் கோட்பட்டவர்கள் என்பதையும் நாம் அறிதல் வேண்டும். எனவே திருக்குறள் வழி நின்று திருக்குறளுக்குப் பொருள் காண்பதே அறநெறியாம். அந்த நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது. திருக்குறள் கூறும் அயலவர் எதிர்ப்புக் கோட்பாட்டின்

முதல் நிலைகள் :

1. தமிழர் மெய்யியலுக்கு மாறுபட்டவை.
2. தமிழ் அறிவர் கண்ட நெறிக்கு மாறுபட்டவை.
3. தமிழர் அறவியலுக்கு முரண்பட்டவை.
4. தமிழர் பண்பாட்டுக்கு வேறுபட்டவை.
5. உலக அறவியலுக்கு முரண்பட்டவை.
6. திருக்குறள் பெண்ணியத்து முரண்பட்டவை.

இரண்டாம் நிலைகள் :

7. உரையாசிரியர்கள் செய்த பிழைகள்.
8. பரிமேலழகர் உண்மையைக் கூறும் பெருந்தன்மை.
9. சமசுகிருதம் பெண்களை அடிமைப் படுத்திய தன்மை.

மூன்றாம் நிலைகள் :

10. தமிழர் மெய்யியல் தடம் புரண்டது.
11. தமிழர் அறவியல் மறக்கப்பட்டது.
12. தமிழ் மக்கள் அயலவர் தந்த சாதிவழிப் பிரிந்து பாழ்பட்டது.
13. தமிழர் கண்ட அறவியல் மெய்யியல் ஆய்வு.
14. இவற்றுக்குக் காரணமான அயலவர் கோட்பாடுகள்.

(இத்தலைப்புக்களில் யாராவது முனைவர் பட்டத்துக்கு ஆய்வு செய்பவரின் தமிழர்க்கு நலம் பயக்கும்). இவற்றைப் பற்றிக் கீழே காண்போம்.

1. தமிழர் மெய்யியலுக்கு மாறுபட்டவை.

திருக்குறள் மெய் உணர்தல் அதிகாரத்துள் "எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" (355) என்றும்; அறிவுடைமை அதிகாரத்துள் "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்

அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" (423) என்றும் கூறிடக் காண்க. இதுவே தமிழர் மெய்யியலின் அடித்தளம் என்பதையும் அறிக. "பார்ப்பான் பிறப் பொழுக்கம் குன்றக் கெடும்" (134) என்று கூறுவதால் ஒழுக்கத்துடன் கூடிய பிறப்பு வேண்டும் என்ற உண்மையை உணர்தல் வேண்டும். "அந்தணர் என்போர் அறவோர்" (30) என்று நீத்தார் பெருமையில் தூயதுறவிகளைப் போற்றக் காண்க. ஆனால் இன்று பார்ப்பான், அந்தணர் என்றும் சொற்கள் பிழைபட உணரக் காண்க. எனவே பாரதியார் தம் பாடல்களில் கூறுவதையும் இங்கு நாம் எண்ணுதல் வேண்டும். (பக். 214 மறவன் பாட்டு) "பேராசைக் காரணடா பார்ப்பான்" என்று இன்றைய பிராமணர்களைப் பழிப்பதைக் காண்க. அத்துடன் திருமந்திரத்தில் திருமூலரும் (பாடல் எண். 81) "பித்தேறும் மூடர் பிராமணர்" எனல் காண்க. நால்வருணம் பேசும் ஆரிய பிராமணர்தம் பொய்மையைக் கடிந்த திருவள்ளுவர்,

"பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" (பெருமை - 972)

என்று பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்று அயலவர் கோட்பாட்டை மறுக்கக் காண்க. எனவே தமிழ்நாட்டு ஆதிசைவர்கள் விசயநகர ஆட்சியில் ஆரிய பிராமணர் பெற்ற ஏற்றங்களைக் கண்டு தம்மையும் பிராமணர் என்று கூறிக் கொண்ட கொடுமையும் நடந்தது. இவ்வாறு தமிழர்தம் மெய்யியல் யாவும் ஆரியர்களால் அழிக்கப்பட்டதை மேலும் பல சான்றுகளால் நாம் உறுதி செய்யலாம். அவற்றை அறிஞர்தம் ஆய்வுக்காக விட்டு மேற்செல்வோம்.

2. தமிழ் அறிவர் கண்ட கருத்துக்கு எதிரானவை :

தமிழ் அறிவர்கள் (சித்தர்கள்) தொல்காப்பியர் காலமுதல் தமிழகத்துள் தமக்கெனத் தனியுலகு படைத்துச் சீருடன் வாழ்ந்தனர். எதனையும் சோதித்து அறியும் ஆற்றல் பெற்றவர்கள். திருவள்ளுவர் அறிவர் நெறி நின்ற அறிவர் தலைவர் என்பதை அவர்தம் கடவுள் வாழ்த்தே உணர்த்தும். சித்தர்கட்கு வெட்ட வெளியாகிய ஆகாயமே கடவுள். தூயமெய்யறிவே கடவுள். திருவள்ளுவர் விண்பற்றிப் பேசுவதையும் வாலறிவன் என்று கூறுவதையும் அறிக. மேலும், அறிவர்கள் புறக்கோயில், புறவழிபாடு இவற்றை ஏலார். திருவள்ளுவரும் கோயில் பற்றியோ?, படிமம் பற்றியோ, பூசைமுறை பற்றியோ பேசாமை காண்க. அறிவர்கள் சாவாத இறவாத பேரின்பப் பெருவாழ்வு கண்டவர்கள், ஓகு சாதனையால் யாவும் வென்றவர்கள். திருவள்ளுவரும் தவம் பற்றியும்

மெய்யுணர்தல் பற்றியும் நீடுவாழ்தல் பற்றியும் கூறிடக் காண்க. திருமந்திரம் "காற்றை அளக்கும் கணக்கறிவாளர்க்குக் கூற்றை உதைக்கும்" ஆற்றல் வரும் என்று கூறும். இதனையே திருக்குறள் "கூற்றம் குதித்தலும் கைகூடும்" (269) என்று கூறும். "தினற்பொருட்டால்" (256), மழித்தலும் (280), மனத்ததுமாசாக (278) கூடா ஒழுக்கம் போன்றவற்றில் திருவள்ளுவர் அயல் நெறிகளை மறுக்கக் காண்க. திருமந்திரம் 2519ல் கூறும் செய்திகளையும் 1463, 2918 ஆம் பாடல்களில் காணும் செய்திகளையும் ஒப்பு நோக்குக. நோக்கின் குறள் கூறும் அறிவர் நெறி புலப்படும். அதனால் திருவள்ளுவர் அறிவர் நெறி நின்று மக்கள் யாவரும் அறிவர் நெறியினைப் பின்பற்ற வேண்டும் என்று கருதியே தம் நூலைத் தந்தவர் என்பதையும் நாம் முதலில் நினைக்க வேண்டும். இன்று இப்பார்வையில் பார்க்காத மூட மக்களே அறிஞர் என்ற போர்வையில் தமிழகத்தில் உள்ளதையும் நாம் எண்ணுதல் வேண்டும்.

3. தமிழர் கண்ட அறவியலுக்கு மாறுபட்டவை :

தமிழர் கண்ட அறவியல் அடித்தளம் முன்னரே விளக்கப்பட்டது. இருப்பினும் திருக்குறளின் கீழ்க்கண்ட அதிகாரங்களைக் காண்க. நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், விருந்தோம்பல், ஈகை போன்ற அதிகாரங்களுடன் காமத்துப்பாலையும் நோக்குக. மற்றும் ஒழுக்கமுடைமை, குடிசெயல் வகை, குற்றங்கடிதல் போன்ற அதிகாரங்களையும் நோக்குக. அத்துடன் அயலவர் (ஆரியம்) கொள்கைக்கு மாறுபட்ட கீழ்க்கண்ட குறட்பாக்களையும் காண்க.

"மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும்

கற்றார் அனைத்திலர் பாடு" (409) என்ற குறளில் தெளிவாகச் சாதி வேற்றுமையைக் கண்டிப்பதுடன், அனைவருக்கும் கல்வி என்று ஆரியத்துக்கு முரண்பட்டுக் கூறக் காண்க.

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து

கெடுக உலகியற்றியான்" (1062) என்றும்,

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும்." (619) என்றும் கூறக் காண்க.

பிச்சையெடுப்பது ஆரியக் கோட்பாடு. விதி என்னும் தலையெழுத்தும் பிராமணக் கோட்பாடு. இரண்டையும் கடுமையாகக் கண்டிக்கக் காண்க. மேலும்,

"உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின்" (257) என்று

புலை வேள்வி செய்யும் ஆரியத்தை இழித்தும்; கள்ளுண்ணாமை அதிகாரத்தால் சோமக் கள்ளைக் கும்பிட்டுப் பிழைக்கும் வேதங்களைச் சாடியும்; "தேவர் அனையர்கயவர்" (1073) என்று முப்பத்து முக்கோடி கயமைத் தேவர்களைக் கண்டிப்பதும் காண்க. இவ்வண்ணம் செவ்வண்ணமாகத் திருவள்ளுவர் ஆரியத்தைக் கண்டித்து அயலவர் கோட்பாட்டை எதிர்க்கக் கண்டும் ஆரியம் போற்றும் அறிவிலித் தமிழர்களை என்னென்பது என்பதுவே இன்றைய கேள்வி?

4. தமிழர் பண்பாட்டுக்கு முரண்பட்டவை :

தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் கூறும் பண்பாடுகளே தமிழர் பண்பாடாகும். அதுவே அயலவர் கலப்பில்லாத பண்பாடாகும். ஆரியம் பெண்மையை இழிவு செய்யும். ஆனால் தமிழர் பண்பாடு பெண்மையைப் போற்றும். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு ஒன்று போதும். தமிழர் பண்பாட்டின் திறங்காண குறிஞ்சிப் பாட்டுக்களவில் அறத்தொடு நிற்றல் என்ற துறையமைந்தது. குறிஞ்சிப் பாட்டுத் தலைவி தன்னுரிமையுடன் தனது தலைவனைத் தேர்ந்து மணம் முடிப்பது காண்க. இங்கு மனுசாத்திரம் கூறும், "இளமையில் பெண்கள் தந்தையர்க்கடிமை, திருமணத்தில் கணவனுக்கு அடிமை, பின்னர்த் தாய் ஆயின் மகனுக்கு அடிமை, பெண்ணுக்கு பொருள் பேறு, கல்விப் பேறு இல்லை" என்று கூறுவதையும் ஒப்பிடுக. மேலும் பெண்ணின் சீர் கூறும் கீழ்வரும் குறட்பாக்களையும் காண்போம்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள"? (54) என்று கேட்டு,

"பெண்ணின் பெருந்தக்கது இல்" (1137) என்று கூறும் திருக்குறள் கருத்துடன் ஆரியர் கூறும் பூரியக் கருத்தினை ஒப்பிட்டு ஆயின் உண்மை தெரியும்.

கல்வியை மாந்தப் பண்பாக்கியும், உழைப்பினைப் போற்றியும் அறம்பல காத்தும், பெண்மைத் தாய்மை போற்றியும், அறிவுடைமையின் பெருமை போற்றும் தமிழர் பண்பாட்டினை அறிக. மேலும் ஆரியம் பழிக்கும் செயல்களை வள்ளுவம் போற்றக் காண்க.

"நல்லாறு எனினும் கொளல்தீது; மேல்உலகம்
இல் எனினும் ஈதலே நன்று" (222) என்றும்,

"யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்துஒன்றும்
வாய்மையின் நல்ல பிற" (300) என்றும்,

"பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" (580) என்றும்,

"ஆவிற்கு நீர் என்று இரப்பினும், நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்" (1066) என்றும்,

"ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" (656) என்றும்,

கூறக் காண்க. இவ்வாறு திருக்குறள் எங்கும் தமிழர்தம் பண்பாட்டினைப் பாராட்டிப் போற்றிக் கூறக் காண்க. நிறைவாக,

"அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்
தம்நோய் போல் போற்றாக்கடை" (315) என்னும் குறளால் உலகின் மண்மாசு, நீர்மாசு, காற்று மாசு யாவும் கண்டிக்கும் தமிழர்தம் உலகளாவிய பண்பாட்டினையும் காணலாம்.

5. உலக அறிவியலுக்கு முரண்பட்டவை

ஏற்கெனவே முன்னுரையில் குமரிக் கண்டத் தமிழர் உலகெங்கும் பரவிய பாங்கினையும் அவர்தம் அறவியல் சிறப்பினையும் குறித்தோம். எமது "சிவசமய வரலாறு பகுதி 1" என்னும் நூலில் உலகளவில் கி.மு. நூற்றாண்டில் பரவி இருந்த அறவியல் பண்பாட்டின் விளக்கத்தைக் காணலாம். தமிழ் இலக்கியங்களில் உலகு என்று தொடங்குவதும், திருக்குறள் உலக அறவியல் போற்றுவதும் எண்ணத்தக்கது. இங்குத் திருக்குறள் மண்பதைக்குக் கூறிய அறவியலுடன் உலகப் பார்வை காட்டும் சில குறட்பாக்களையும் காண்போம்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (1) என்ற குறள் தொடங்கி மனம் படைத்த மாந்தர் அனைவரும் அறவோர் ஆக "மனத்துக் கண் மாசிலனாதல் அறம்" (34) என்றும் அறுதியிடக் காண்க. அத்துடன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (50)

என்னும் குறட்பாவால் மனிதன் உலக அறவியல் போற்றித் தெய்வம் ஆகும் வழியும் கூறக் காண்க. மேலும்,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (140) என்றும்,

"உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு" (425) என்றும்,

"உலகத்தார்உண்டு என்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்." (850) என்றும் கூறும்.

குறட்பாக்களின் உண்மைப் பொருள் காணின் உலக அறவியல் நுட்பம் புலப்படும்.

6. திருக்குறள் கூறும் பெண்ணியத்துக்கு முரண்பட்டவை

சமசுகிருதத்தில் உள்ள நான்கு வேதங்களும் ஐந்து சுமிருதிகளும் பெண்ணடிமைத் தனத்தை வற்புறுத்தும். என்றைக்கும் பொருளியல், கல்வியல் ஆற்றல்கள் பெண்மை பெறக் கூடாது என்பதில் கவனம் செலுத்தியவர்கள் ஆரியர்கள். அவற்றுள்ளும் நாரதநீதி, சுக்ரநீதி, வியாச நீதி, மனு நீதி போன்றவை பெண்களுக்கு எந்த உரிமையும் தரக்கூடாது என்று கூறும். ஆனால் இன்று படித்த பெண்கள் கூட இந்தச் சிந்தனையற்று திரிவதின் பின் செல்லல் வேதனை தரும். மேலை ஆரியக் கருத்தும் பெண்களுக்கு உரிமை தரக் கூடாது என்பதோ சாக்ரட்டீசு கூட பெண்களுக்கு தன்னைத்தான் கட்டுப்படுத்தும் ஆற்றல் அற்றவர்கள் என்று கூறியதைக் காண்க. ஆனால் திருக்குறள் காமத்துப் பாலிலும் இல்லறவியலினும் குறிப்பாக வாழ்க்கைத் துணை நலம், இல்வாழ்க்கை அதிகாரங்களில் பெண்ணின் பெருமை கூறக் காணலாம். "பெண்ணின் பெருந்தக்கது இல்" என்று திருக்குறள் கூறுவதை முன்னரே எடுத்துக் கூறியதையும் நினைக்க, வாழ்க்கைத் துணை நலத்தில்,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (56) என்று கூறுவதால் பெண்ணே சக்தி என்பதையும் காண்க. தொல்காப்பியம் கூறும் பத்துவகையான ஒப்புமைகளையும், திருமந்திரம் "பெண் கொடியாக நடந்தது உலகு" என்பதையும் இங்கு நினைக்கின்ற தமிழர் பெண்மைக்குத் தந்த ஏற்றத்தை

அறியலாம். ஆனால் பெண்கள் தான் தங்களைத் தாழ்வுபடுத்தும் ஆரியத்துக்குத் துணை போய்த் தமிழ்ப் பண்பாட்டைத் தாழ்த்துகின்ற கொடுமையும் நடக்கின்றது.

7. உரையாசிரியர்கள் செய்த பெரும் பிழைகள் :

உரையெழுதியவர்கள் அத்துணை பேரும் ஆயிரம் ஆண்டுகள் கழித்து வந்தவர்கள். அவர்கள் காலத்தில் தமிழகத்தில் நிலை அடிமைப்பட்ட நிலை. பல்லவர் காலமுதல் தமிழ் மக்கள் நல்ல அடிமையாகவே உள்ளனர். பிற்காலச் சோழர் காலத்தில் விடிவெள்ளி தோன்றினும் தமிழகத்தின் அடிமை இருள் நீங்கவில்லை. *பெருமன்னன் இராசராசன் வடபுலத்து மறையவர்கள் என்றும்* ஆரியத்துக்கு அடிமைப்பட்டு "மனுவாறு பெருக" நாடாண்ட கேடும் நடந்தது. அவனே வடபுலத்துப் பிராமணர்களைக் கொண்டு தமிழகத்தில் இடங்கை 98 வலங்கை 98 சாதிகளைப் பிரித்துத் தமிழ்ப் பண்பாட்டினை அழித்தவன் ஆவான். மீண்டும் விசயநகர ஆட்சி பிராமணர் தம் ஆட்சியாக அமைத்தது. அக்காலத்தில் வாழ்ந்த உரையாசிரியர்கள் செய்த பிழைகளைக் கீழ்க்கண்டவாறு நாம் காணலாம்.

1. மூல நூலின் கருத்தினை அறியாமல் செய்தது.
2. காலக் கோட்பட்ட உரை கூறியது.
3. சமசுகிருத அடிப்படையில் உரை கூறியது.
4. தமது குறைமதியால் திருக்குறளின் உயர்வை அறியாதது.
5. திருவள்ளுவர் தம் உள்ளம், நோக்கம் அறியாமை.
6. திருவள்ளுவரின் உலகியல் பொதுமை அறத்தையும் மெய்யியலையும் மறைத்தமை.

போன்ற குறைகள் உரையாசிரியர்களால் ஏற்பட்டன. இன்றுங் கூட புதுமை உரைகண்டவர்கள் பலர் இந்தத் தாக்கத்திலிருந்து விடுபட இயல வில்லை.

8. பரிமேலழகர் தம் பெருந்தன்மை :

திருக்குறள் உரையில் சமசுகிருத அடிப்படை நின்று உரை கூறியவர் பரிமேலழகர். ஆனால் அவர் பெருந்தன்மையுடன் தான் திருக்குறளுக்குச் சமசுகிருத அடிப்படையில் உரை கூறுவேன் என்று கூறியதைக் கண்டு நாம் போற்ற வேண்டும். அவருடைய உண்மை கூறும் திறம் போற்றத் தக்கது.

திருக்குறள் முப்பால் என்ற பெயர் கொண்டது. முப்பாலுக்கு அவர் எழுதிய முன்னுரைகளையும் அதிகாரங்கட்கு அவர் எழுதிய முன்னுரை விளக்கங்களையும் அயலவர் எதிர்ப்புக் கருத்துக்கள் உள்ள குறட்பாவிற்கு அவர் கூறிய உரைகளையும் காணின் பரிமேலழகர் கூறும் உரையின் நோக்கம் புரியும். அவற்றைக் காண்போம்.

"அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்" "அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு வகுக்கப்பட்ட பிரமசரிய" நிலைகள் பற்றியும் உரைப்பாயிரத்தில் கூறும் கொடுமை காண்க. (பக். 9 சீறி மகள் கம்பெனி வெளியிட்ட உரை 1953) அவ்வாறே சித்தர் நெறி நின்று கூறிய கமிஷன் வாழ்த்துக்கு "ஏற்புடைக் கடவுளை என அறிக" என்று திரித்துக் கூறக் காண்க. மேலும் தெளிவாகத்தான் ஆரிய அடிப்படையில் உரை கூறுகின்றேன் என்பதைக் காமத்துப் பால் முன்னுரையில் கூறக் காண்க. மேலும், வினைத் தூய்மை அதிகாரத்தில் உள்ள

"ஈன்றாள் பசிகாண் பானாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" (656)

என்ற குறளுக்கு உரையெழுதும் போது சமசுகிருத நெறியடிப்படையில் உரை வரையர் காண்க. அவ்வுரையில் "அறநூற் பொது விதி" என்பது சமசுகிருத நெறி என்பதையும் அறிக. அதனைப் பெருந்தன்மையுடன் அவரே குறை கூறக் காண்க.

9. சமசுகிருதம் பெண்மையை அடிமைப்படுத்தியது

ஆரியர்களின் வேதம், கடவுளர்கள், தேவர்கள் யாவும் பெண் தன்மையை இழிவுபடுத்தும். அவர்கள் பெண்களுடன் இங்கு வந்தவர்கள் அல்லர் என்பதையும் நாம் நினைக்க வேண்டும். நாடோடிகளாக வந்த அவர்கள் இங்குள்ள பெண்களையே தமது இச்சைக்கு ஆட்படுத்தினர் என்பதை அவர்களின் "ரிக்" வேதம் எடுத்துக் கூறும். பெண்களைப் பற்றிய இழிவான வருணனைகள் தக்க சான்றாகும். இக்கட்டுரை அவர்களின் சுமிருதிகள் கூறும் பெண்ணடிமைத் தனத்தை முன்னர் கூறியுள்ளதையும் காண்க. திருவள்ளுவர் ஒருவரே தமிழ்ப் பண்பாட்டின் அடித்தளத்தில் நின்று பெண்ணின் பெருமை பேசுகின்றார் என்பதையும் இன்றையப் புரட்சிப் பெண்மணிகள் உணர வேண்டும்.

10. தமிழர் மெய்யியல் தடம் புரண்டது

தமிழ் மக்கள் என்றைக்கும் தம்மொழி, தம்மினம், தான், தனது என்ற உணர்வற்றவர்கள். இன்றுங்கூட "அடுத்தவன் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற நம்பிக்கை கொண்டவர்கள். ஆதலால் திருவள்ளுவர் "குற்றங்கடிதல்" முதலான பல அதிகாரங்களில் இக்குறையினைச் சுட்டுவர். இன்றுங்கூட படித்தவர்கள் தமிழ்ப் பகைவர்களின் ஏவலராக, விலங்கு நிலையில் இருக்கக் காண்க. தமிழ் மக்கள் அறியாமையைக் காதலிக்கும் தாழ்ந்த போக்கு உள்ளவர்கள் என்று 430வது குறளில் திருவள்ளுவரே கூறக் காண்க.

11. தமிழர் அறவியல் மறக்கப்பட்டது

இன்றைய ஆங்கில அடிமைகளும் ஆரிய அடிமைகளும் அனைத்துத் துறையில் ஆதிக்கம் பெற்றுத் தமிழர் அறவியலை அழித்து வருகின்றனர். அதனைத் தடுத்து நிறுத்திட நாம் உழைத்திட வேண்டும். இன்றையத் தமிழனுக்கு இலவசங்கள் கிடைத்தால் போதும் தன் மானத்தையே இழப்பான் என்பதைக் காணலாம். எனவே தன்மானம் தன்மதிப்பு மிக்கவனாகத் தமிழன் மாறிடத் தக்க பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

12. தமிழ் மக்கள் சாதிவழிப் பிரிந்து பாழ்பட்டவை

சங்க காலம் சாதியற்ற சமூகம். சங்க இலக்கியத்துள் நெய்தல் திணைப் பாடல்கள் அனைத்திலும் தலைவர்கள் குறிஞ்சி நிலத்தவராக இருக்கக் காணலாம். மேலும் களவுத் திருமணங்கள் வேற்றூரில் நடந்ததால் சாதியற்ற சமூகம் என்பதும் உறுதிப்படும். இராசராசன் வடபுலத்து மறையவர்களை அழைத்து வந்து தமிழகத்தில் சாதி பிரித்தமை முன்னர்க் கூறப்பட்டது. "செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே" என்ற குறுந்தொகைப் பாடலையும் காண்க. எனவே சங்க காலத்தில் சாதியற்ற தமிழ் மக்கள் பின்வந்த கேட்டால் சாதி பெற்றதையும் அறிதல் வேண்டும்.

13. தமிழர் அறவியல் மெய்யியல் அழிவு

தமிழகத்தில் பல்லவர்கள் பாலி மொழியை வைத்து ஆண்டனர். பின்வந்த சோழர்கள் மனுவாறு பெருக ஆண்டனர். எனவே இடைக்காலத்தில் தமிழகம் பிராமண ஆதிக்கம், சாதி ஆதிக்கம் பெற்றது. இதனை உறுதி

செய்யும் வண்ணம் விசயநகர ஆட்சி ஏற்பட்டது. (பக்கம் 441. புலவர் குழந்தையின் கொங்கு நாடு) எனவே தமிழ் மக்கள் ஆரியத்தின் மீளா அடிமை ஆயினர்.

14. இன்றும் தமிழகத்தை ஆளும் ஆரியக் கோட்பாடுகள்

1. சாதி ஆதிக்கம்
2. மத ஆதிக்கம்
3. அயலவர் பண்பாட்டு ஆதிக்கம்
4. அயலவர் அரசியல்
5. பகுத்தறிவின்மை
6. கல்வியில் அடிமைத்தனம்
7. பணம் படைத்தவர்களின் பழிச் செயல்
8. பதவி பெற்றோர் தம் இழி செயல்
9. அயல்மொழி ஆதிக்கம்
10. மக்கள் சிந்தனையில் அயலவர் ஆதிக்கம்.

இவற்றைப் பற்றி "Hindu Ethics' என்ற ஆங்கில நூல் கூறக் காண்க. இன்றைய தமிழர், தமிழர் அல்லர் என்ற நிலைக்கு ஆளாகி இருப்பதைக் காண்க. எனவே திருக்குறள் மக்கள் நெஞ்சில் ஆட்சி பெறச் செய்வன செய்வது அறிஞர் கடன் என்பதையும் அறிதல் வேண்டும்.

முடிவுரை

1800 ஆண்டுகளுக்கு மேலாக வந்தவர்க்கெல்லாம் நல்ல அடிமைகளாக இருக்கும் தமிழ் மக்களைத் திருத்துதல் எளிதன்று. அழிந்த தமிழர் அறவியல் மெய்யியல் எது எனக் காண்பதும் அரிது. இந்நிலையை மாற்றிடத் தமிழ் உணர்வாளர்கள் ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் திருவள்ளுவரை நாம் முழுமையாகப் புரிந்து கொண்டவர்கள் ஆவோம். இன்றேல் அழிவு ஒன்றே உறுதியாம்.

ஒப்பீட்டு நோக்கில் காப்பியங்களில் கிளைக் கதைகள்

ச. கொடியரசு
அண்ணாமலை நகர்

காப்பியம் என்னும் புதிய இலக்கிய வகைமையைப் படைத்துத் தமிழ்க் கவிதை மரபிற்கு மற்றுமொரு மகுடம் சூட்டியவர் இளங்கோவடிகள். காப்பிய மரபில் இவரின் வழித்தோன்றலே சாத்தனார். சங்கம் மருவிய காலக்கட்டத்தில் இயற்றப்பட்ட சிலப்பதிகாரமும் மணிமேகலையும் காலத்தால் அழியாத காப்பியங்கள். தமிழ் மண்ணின் கதை தழுவி அழகுறப் படைக்கப்பட்ட காப்பியங்கள். ஐம்பெருங்காப்பியங்களில் தலைசிறந்த காப்பியங்கள். இவையிரண்டும் இரட்டைக் காப்பியங்கள். மணிமேகலைக்கு முன் படைக்கப்பட்டது சிலம்பு. சிலம்பின் முடிவு மேகலையின் தொடர்ச்சியாகும்.

இரட்டைக் காப்பியங்களில் சமயம்

இளங்கோ சமண சமயத்தை உயர்த்திப் பிடிப்பதற்காகச் சிலம்பை வடித்தார். இருப்பினும் மற்ற சமயங்களை வெறுத்தொதுக்கவில்லை. சாத்தனாரோ மேகலையில், பௌத்த சமயமே மற்றைய சமயங்களை விட உய்ர்ந்தது எனச் சமயப் பிரச்சாரமே செய்தார். முன்னவரின் கருத்தில் பெரும்பகுதி பின்னவரால் நிராகரிக்கப்பட்டது அல்லது அக்கருத்துக்கு எதிர்வாதம் செய்யப்பட்டது. இளங்கோவின் சமண சமயக் கொள்கையைச் சாடும் போக்கு மேகலையில் சற்றுத் தூக்கலாகவே தென்படுகின்றன. சமய மோதல்கள் அவர்கள் தத்தம் காப்பியத்தில் படைத்துள்ள கிளைக் கதைகளில் காணப்படுகின்றன. அவற்றை இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

கிளைக் கதையின் இலக்கணம்

கிளைக்கதை என்ற சொல்லுக்கு ஒன்றிலிருந்து தோன்றும் பலகதை என்று பொருள். கிளை என்ற சொல் உறவுடையது என்பதைக் குறிக்கும். மையக் கதைக்கு உறவுடைய கதையாகலின் அது கிளைக்கதை எனப் பெயர்

பெற்றது. காப்பியத்திற்குள் கட்டாயம் இடம் பெற வேண்டிய உறுப்பாக அது உள்ளது.

கிளைக்கதை மையக் கதையினுள் தொடர்ந்து பயனித்து விளக்க நடையில் சொல்லப்பட்டிருக்கும்.

ஒரு நிகழ்ச்சி அல்லது ஓரிரண்டு நிகழ்ச்சிகள் கதைப்படுத்திக் கூறப்பட்டிருக்கும்.

கிளைக் கதைகள் காப்பிய மாந்தரின், உணர்த்துவதற்கும், ஓதற்கும் உரிய அறிய பண்புகளை வெளிப்படுத்தும்.

கிளைக் கதைகள் பெரும்பாலும் கூற்று முறையில் அமைந்திருக்கும். மிகச் சிறுபான்மை மாறுபடலாம். கிளைக்கதைகள் காப்பியத்துள் எப்பாத்திரக் கூற்றாகவும் அமைந்து வரலாம்.

கிளைக் கதைகள் பெரும்பாலும் இறந்த காலத்தில் நடந்த கதையாகவே அமைந்திருக்கும். சிறுபான்மை காப்பிய நிகழ்காலத்தில் நடப்பினும் அது, நடந்த நிகழ்ச்சியாகவே அமைந்திருக்கும்.

கிளைக் கதைகள் காப்பிய உத்தியாக இடம் பெறும். கிளைக் கதைகள் ஆசிரியரின் கொள்கையை வலியுறுத்தும். பெரும்பாலும் காப்பிய மையக் கதையின் கருத்தைத் தழுவியே அமையப்பெறும், சிறுபான்மை வேறுபட்டு அமையலாம்.

கிளைக் கதைகள் பாவிகம் பேசுவதாக வரலாம். ஆனால் பெரும்பாலானவை காப்பியப் பாவிகத்துடன் தொடர்பின்றித்தான் அமைக்கப்பட்டிருக்கும். மையக் கதைக்குக் காட்டும் புலவனின் பற்று இவ்வகைக் கிளைக் கதைகளில் காணப்படாது.

கிளைக் கதையில் இடம் பெறும் மாந்தர்களின் பெயர்கள் கட்டாயம் குறிப்பிடப் பெற்றிருக்க வேண்டும். பெயர் குறிப்பிடப் பெறவில்லையெனில் அது துணைக் கதையாகக் கருதப்படும். சுருங்கச் சொல்லின் கிளைக் கதைகள் சிறுகதை போன்ற அமைப்பினது.

இரட்டைக் காப்பியங்களில் கிளைக்கதைகள்

காப்பியத்தின் சுவையைக் கூட்டுவதற்காகவும் அளவினைப் பெருக்குவதற்காகவும் ஆசிரியரால் கையாளப்படும் மிகச் சிறந்த உத்தியே கிளைக்கதைகள். கற்போரின் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்திலும் பதினாறு கிளைக்கதைகள் காணப்படுகின்றன. அவை, உலகத்து உண்மைப் பொருள்களை எடுத்தியம்புகிறது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ச் சுவையைக் கூட்டுகின்றது.

மணிமேகலையில் பத்தொன்பது கிளைக்கதைகள் உள்ளன. கதை குறுமையுடையதால் கிளைக் கதைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேகலையைப் பக்குவப்படுத்திப் பௌத்த துறவியாக்க இக்கதைகள் பயன்படுகின்றன. பசிப்பிணியின் எல்லையை விவரிக்கின்றன. பௌத்தப் பண்பாட்டியைப் பறைசாற்றுகின்றன. மொத்தத்தில் சாத்தனாரின் இலக்கியப் புலமையை உலகறியச் செய்கின்றது.

இளங்கோ - சாத்தனார் நட்பு

பதிகம் என்ற ஓர் அமைப்பைக் காப்பிய ஆசிரியர்கள் நூல் முகப்பில் கைக் கொள்கிறார்கள். பதிகம் என்பது பொருளடக்கம் போன்றது. என்னென்ன தலைப்புகளில் நூலின் பொருள் பாகுபடுத்தி அமைக்கப்படுகிறது என்று காட்டுவது. நூல் எழுந்த வரலாற்றையும் கூறுவது.

வேங்கை மர நிழலிலே ஒரு தனம் இழந்த கண்ணகியைக் கண்டு குன்றக் குறவர்கள் சாத்தனிடம் சொல்ல, சாத்தன் கண்ணகி கதையை இளங்கோவிடம் எடுத்துக்கூறி 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது. அடிகள் நீரே அருளுக' என்றார். அதன்பிறகே இளங்கோ, முப்பது காதைகளையுடைய உரைநடை கலந்த பாடலாகச் சிலம்பைக் கட்டமைத்துச் சாத்தனிடம் கூறினர் என்கிறது சிலம்புப் பதிகம்.

அதேபோல் மேகலையும் "இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாத்தன் மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு" இளங்கோவின் வேண்டுகோளின்படியே முப்பது காதைகளாகச் சாத்தனார் இயற்றினார் என்கிறது மணிமேகலைப் பதிகம்.

மேற்குறிப்பிட்டுள்ள சிலம்பு மற்றும் மேகலையின் காப்பியப் பதிகங்களின் வழி, ஒருவர் கருத்துக்கு மற்றவர் மதிப்பளித்தமை தெரிகிறது. இதனால் இளங்கோவும் சாத்தனாரும் ஆழ்ந்த நட்புடையவர்கள் என்பதும் புலப்படுகிறது.

இருப்பினும் சமுதாயத்தில் வெறுத் தொதுக்க வேண்டிய தற்காலத்தைய சாதியச் சண்டை போல் அவர்கள் காலத்திலும் சமயச் சண்டை சற்று வீரியத்துடன் வெளிப்பட்டது என்பது வெள்ளிடைமலை. சமயமா நட்பா என்று வரும் போது, சமயமே முன் நிற்பதை கீழ்வரும் கிளைக் கதைகளின் வழி அறியலாம்.

சிலம்பில் கிளைக் கதைகள்

சிலம்பில் புகார்க் காண்டத்தில் பத்துக் காதைகள் இடம் பெற்றுள்ளன. மங்கல வாழ்த்தில் தொடங்கி மனையறம்படுத்த காதை, அரங்கேற்றுக் காதை, அந்திமாலை சிறப்புச் செய்காதை, இந்திரவிழா ஊர் எடுத்த காதை ஆகிய ஐந்து காதையில் இளங்கோ எந்த ஒரு கிளைக் கதையையும் புகுத்தவில்லை. ஆறாவது காதையான கடலாடு காதையில் தான் நாளங்காடிப் பூதக் கதையை முதல் கிளைக் கதையாக அமைத்துள்ளார். இக்கடலாடு காதையில் விஞ்சயர் வீரனால் இரண்டு கிளைக் கதைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. அவை, நாளங்காடிப் பூதக்கதை மற்றும் ஊர்வசி சாப வரலாற்றுக் கதையாகும்.

விஞ்சயர் வீரன்

நாளங்காடிப் பூதக்கதை மற்றும் ஊர்வசி சாப வரலாற்றுக் கதைகளை விஞ்சயர் வீரன் தன் காதலிக்கு எடுத்துரைக்கும் நோக்கில் காப்பியத்துள் அமைத்துள்ளார் இளங்கோ. வித்யாதரன் என அழைக்கப்படும் விஞ்சயர் வீரன் தேவர், அசுரர், முனிவர், கின்னரர், கிம்புருடர், கருடர், இயக்கர், இராக்கதர், கந்தருவர், சித்தர், சாரணர், வித்யாதரர், நரகர், பூதம், வேதாளம், மதராகணம், ஆகாச வாசிகள், போகபூமியோர் என்ற பதினெண் கணத்தாருள் ஒருவர். காமக்கடவுட்கு விழாவை விரும்பிச் செய்வோன். (சிலம்பு - அடியார்க்கு நல்லார் உரை ப. 184) மானிடர் தம்மைக் காண்டல் அறியா மரபினர். மேலது 193). புகாரின் சிறப்பை மக்கள் கூறுவதாக அமைப்பின் அது

சிறக்காது எனக் கருதிய ஆசிரியர் காமனை வழிபடும் ஒரு தேவசாதியைச் சார்ந்த வானவன் வழியாகவே விவரிக்கின்றார்.

தன் காதலியுடன் இமயமலை, கங்கைநதி, உஞ்சைப்பதி, விந்தமலைக்காடு, வேங்கடமலை, காவிரிநாடு எனப்பல இடங்களைச் சுற்றிய பின் புகார் நகருக்கு இந்திரவிழாக் காண வருகை தருகிறான். அப்புகாரில், காணத் தகுந்த பல இடங்களையும் கொடுங்காட்டி முதலிய ஆடல்களையும் தன் காதலிக்குக் காட்டுகிறான். இவை இவை பார்க்கத் தகுந்த இடங்கள் என்று மட்டும் சுட்டாது, அவ்விடங்களின் சிறப்பை அதன் பின்னணியோடு தன் காதலிக்குச் சுவைபட விளக்குகின்றான். புகாரில் காணக்கூடிய இடங்களில் ஒனறாக நாளங்காடிப் பூதத்தைச் சுட்டுகிறான். அழகுமிக்க புகார் நகரைக் காக்கும் நாளங்காடிப்பூதம் எவ்வாறு இந்நகருக்கு வந்தது என்பதைக் கூறுகிறான். மேலும் மாதவியின் முற்பிறப்புக் கதையான ஊர்வசி கதையையும் விஞ்சயனே கூறுகிறான்.

இளங்கோ, மாதவியை அறிமுகப்படுத்தும் அரங்கேற்றக் காதையிலேயே 'பிறப்பில் குன்றாத பெருந்தோள் மடந்தை'யாகக் கட்டுரைக்கின்றார். அப்படிப்பட்டவளை இந்திரனின் மகனாகிய சயந்தனுடன் ஊர்வசிக்கு ஏற்பட்ட காதலால் அகத்தியனால் இட்ட சாபமானது வந்து பற்றியது. அச்சாபம் நீங்கிச் சித்திராபதியின் மகளாக மிக்க அழகுடன் பிறந்ததை வண்ணனையாக எடுத்துரைக்கின்றார். இக்கதையில் ஊர்வசி தன் கடமையிலிருந்து தவறியவளாகச் சுட்டப்பட்டுள்ளாள். நன்முறையில் கலையுணர்வைத் தராததால் இந்திரனின் சாபத்திற்கு ஆளாகி மாதவி என்ற பெயருடன் நல்ல அழகியாக, கலையரசியாக இவ்வுலகில் தோன்றினாள். அவள் ஆடலையும் காண்போம் மேலும் அமரர் தலைவனையும் வணங்கி வரலாம் என்று விஞ்ஞய வீரன் தன் காதலிக்குக் காட்டுவதாக இளங்கோ கூறுகின்றார்.

மேற்குறிப்பிட்டுள்ள நாளங்காடிக்கதை, ஊர்வசி சாப வரலாறு ஆகிய கதைகளில் இளங்கோ, விஞ்சய வீரனை ஓர் உயர்ந்த நிலையிலேயே படைத்துள்ளார். புகாரின் பெருமையை எடுத்துரைப்பவனாக, மாதவியின் முற்பிறப்பான ஊர்வசி கதையையும், மாதவியின் ஆடற் சிறப்பையும் சிறப்பித்துக் கூறுபவனாகவே சித்திரித்துள்ளார்.

மணிமேகலையில் கிளைக் கதைகள்

மணிமேகலையில் முதல் கிளைக்கதை சுதமதி கதை. அது, மூன்றாவது காதையான மலர்வனம் புக்க காதையில் இடம் பெற்றுள்ளது. சுதமதி, தனக்கு விஞ்சயனால் நேர்ந்த கொடுமையை உரைக்கிறாள். சிலப்பதிகாரத்தில் முதலிரண்டு கதைகள் விஞ்சயவீரனால் உரைக்கப்படுவது போல மேகலையின் முதலிரண்டு கதைகள் சுதமதியால் உரைக்கப்படுகின்றன.

சுதமதி கதை முற்பகுதி

சண்பை நகரத்திலே கௌசிகன் என்னும் அந்தணனின் ஒரே மகள் சுதமதி. எங்கும் தனியாளாகச் செல்லுதற்கு அஞ்சாதவள். ஒரு நாள் மலர் வனத்தில் தனியாகக் பூக்கொய்து கொண்டிருந்தாள். அப்போது, மாருதவேகன் என்னும் பெயருடைய விஞ்சையன் ஒருவன் இந்திரவிழாக் கான, இந்நகருக்கு வருகை தந்தான். ஆகாயமாக வந்தவன் தாரும் மாலையும் அணிந்தவனாகவும் பொன்னணிகளைப் பூண்டவனாகவும் காணப்பட்டான். மேலும், உலகோர் கண்டறியாத பலரும் தொழுது போற்றும் வடிவுடையவனாகவும் விளங்கினான். அவன் என்னை எடுத்துக் கொண்டு வானகத்தே எழுந்தான். என்னைத் தன்வயப்படுத்திக் கொண்டான். நானும் அவனுடைய தன்மையினளாகவே ஆகியிருந்தேன். அவ்விஞ்சையன் பின்னர் என்னை இவ்விடத்தே விட்டுப் பிரிந்து அருளினின்றித் தானும் நீங்கிப் போய்விட்டான் என்று சுதமதி தனியாக மலர் பறிக்கச் சென்றதால் ஏற்பட்ட துன்பத்தைக் கூறினாள். இக்கதையில் விஞ்சயவீரனை சுதமதியின் வாழ்வைக் கெடுத்த காமக்கொடூரனாகவே சாத்தனார் சித்திரித்துள்ளார். இது இளங்கோவின் கருத்திற்கு முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றது.

சுதமதி கதை பிற்பகுதி

மலர் வனம் புக்க கதையில் குறிப்பிட்டுள்ள சுதமதியின் முற்பிறப்புக் கதையின் தொடர்ச்சியாக மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதையில் சுதமதி பௌத்தம் தழுவிய காரணத்தைக் குறிப்பிடுகின்றார். காப்பியத் தலைவனான உதயகுமாரன் சுதமதியிடம், சமணப்பள்ளியினுள்ளே ஒரு விஞ்சையனால் இடப்பட்ட பெண்ணே பௌத்த சங்கத்தைச் சார்ந்த மாதவி

மகளுடன் வந்ததற்குக் காரணம் யாது எனக் கேட்க, சுதமதி தன் கதையை எடுத்துரைக்கிறாள். முற்கதையில் மணிமேகலையிடம் கூறிய சுதமதி பிற்கதையில் உதயகுமாரனிடம் சமணமதத்தின் அடைக்கலப்பண்பைக் குறைகூறி, பௌத்த மதத்தின் அடைக்கலப்பண்பை உயர்த்திப் பேசுகின்றாள்.

விஞ்சயனால் இந்நகரத்தில் விடப்பட்டபின் ஒரு நாள் என் தந்தை அந்தணர்களோடு குமரியில் நீராடுவதற்குச் சென்றார். அப்போது இந்நகரில் எனைக்கண்டு இங்கு எப்படி வந்தாய் என வினவி என்மீது இருந்த அன்பின் காரணமாக இங்கேயே தங்கலானார். ஒரு நாள் பிச்சை எடுத்து உண்ணும் போது ஒரு பசு அவரை முட்டிக் குடலைக் கிழித்தது. அக்குடலைக் கையில் பிடித்தவாறு முன்பு நானிருந்த சமணப்பள்ளியை நோக்கிச் சென்று என்னைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறினார். அதைக் கேட்ட அவர்கள் சினந்து எங்கள் இருவரையும் புறந்தள்ளினர். கதியற்ற எங்களைப் பாதுகாக்கும் அறவோர் எவரேனும் உளரோ என்று முறையிட்டோம். அப்போது மனைதோறும் சென்று ஐயமெடுக்கும் சங்கதருமன் என்னும் முனிவன் என் தந்தையின் துன்பம் நீங்கும்படி அவரைத் தழுவி எடுத்துக் கொண்டு பௌத்த சங்க இருப்பிடத்தைக் காட்டி என் தந்தையின் மரணத் துன்பத்தை நீக்கினான். அச்சங்க தருமன் எமக்குப் புத்த தருமத்தை அருள் செய்தான். அப்போது முதல் பௌத்த சங்கத்தைச் சார்ந்த மாதவியுடன் தங்கலானேன் என்று தான் பௌத்த மதத்தைச் சார்ந்த கதையைக் கூறினாள்.

மணிமேகலையோ சுதமதியின் வாயிலாக சமணர்கள் அடைக்கலம் கொடாமையும், பௌத்தர்கள் அடைக்கலம் கொடுத்தமையும் எடுத்துரைக்கப்பட்டு அவ்வாறு உயர்ந்த பௌத்த சமயத்தையே மணிமேகலை பின்பற்றப் போகிறாள். நீயும் பௌத்தத்தை உயர்வாக நினைத்து மணிமேகலையை மறந்து விடு என, உதயகுமாரனிடம் எடுத்துக் கூற அவனையும் பக்குவப்படுத்தும் நோக்கு இக்கதையில் காணப்படுகின்றது.

படைப்புகளில் முரண்பாடு

சிலம்பில் கூறப்படும் விஞ்சயவீரன் புகாரின் பெருமை பேசுகின்றான். மாதவியின் குடிப்பிறப்பை எடுத்துரைக்கின்றான். தன் மனைவியுடன் பிற இடங்களைக் காண வருகின்றான். ஆனால் மேகலையில் கூறப்படும் விஞ்சயவீரன் பெண்ணின்பம் நுகரும் தன்மையுடையவன். சுதமதியை

நட்டாற்றில் விட்டுச் சென்றவன். மேலும் காப்பிய நாயகனான உதயகுமாரனைக் கொடுவாளால் கொன்றவனும் காயச் சண்டிகையின் கணவன் விஞ்சயனே. சாத்தனாரின் கருத்துக்கள் இளங்கோவின் கருத்திற்கு முற்றிலும் மாறுபட்டது.

அதே போல் சுதமதியின் பிற்பகுதிக் கதை சிலம்பில் கூறப்படும் சமணர்களின் அடைக்கலப் பண்பிற்கு முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றது. குடல் சரிந்து உயிருக்குப் போராடும் ஒருவரைச் சமணர்கள் வெறுத்து ஒதுக்கினர் என்கிறது மேகலை.

சிலம்பில், சமணத்துறவியான கவுந்தியடிகள் கோவலன் கண்ணகியைப் பாதுகாப்பாக மதுரை நகர் நோக்கி அழைத்துச் செல்வதுடன் இடைக்குல மடந்தையான மாதரியிடம் அடைக்கலமாக ஒப்படைக்கின்றார். அங்கு அடைக்கலத்தின் சிறப்பைக் கூறுவதற்காகவே குரங்குக்கை வானவன் கதையைக் காப்பிய ஆசிரியர், கிளைக் கதையாகப் புகுத்தியுள்ளார். கோவலன கண்ணகியுடன் சமணப் பெண் துறவியான கவுந்தியடிகளின் பாத்திரத்தின் வழி இளங்கோவே பயணிப்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

நாடுகாண் காதையில் வம்பப் பரத்தையும் வறுமொழியாளனும் கோவலன் கண்ணகியைப் பார்த்து இவர்கள் ஒரே தாய்க்குப் பிறந்த கணவன் மனைவியரோ எனக் கேலி செய்தனர். கவுந்தியடிகளான சமணத்துறவி அவர்களை நரிகளாகச் சபித்தார். அவ்வாறிருக்க சமணத்தைப் பின்பற்றிய சுதமதி மற்றும் உயிருக்குப் போராடும் அவரின் தந்தையை ஏன் வெறுத்து ஒதுக்கினர் என்பது புலப்படவில்லை. ஒரு வேளை சமண மற்றும் பௌத்த சமயப் போர் புதிய உச்சத்தைத் தொட்டிருக்க வேண்டும்.

முடிவுரை

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ தம் காப்பியத்தில் எடுத்தாண்டுள்ள கிளைக் கதைகளும் சாத்தனார் எடுத்தாண்டுள்ள கிளைக் கதைகளும் வெவ்வேறு கோணத்தில் காணப்படுகின்றது. இவ்விரு ஆசிரியர்களும் தத்தம் காப்பியப் பதிகத்துள் உள்ளவாறு ஒருவர் சொல்ல மற்றவர் காப்பியம் புனைந்தனர் எனில் ஏன் இந்த முரண்பாடு. இவ்விரு ஆசிரியர்களும் தத்தம் மதத்தில் (கருத்தில்) உறுதியுள்ளவர் எனில் படைப்பில் முரண்பட்டுக்

காணப்பட்ட இவ்விருவரும் வாழ்விலும் முரண்பட்டிருந்தனரா. எனினும் இளங்கோவிடம் காணப்பட்ட மென்மையான அணுகுமுறை சாத்தனாரிடம் இல்லை. பிற சமயத்தைச் சற்றுக் கடுமையுடன் எதிர்த்தார். இளங்கோ சமண சமயத்தை ஆதரித்துக் காப்பியம் புனைந்தாலும் சாத்தனார் போல் சமயவாதம் செய்யவில்லை. இரட்டைக் காப்பியம் என அழைக்கப்படும் இவ்விரு காப்பியங்களும் கதைத் தொடர்ச்சியாலேயே அப்பெயர் எய்தியது. ஆனால் கருத்தை வழியுறுத்தும் போது முரண்பட்டுக் காணப்படுகின்றது. ஆசிரியரின் உளக்கருத்தின் வெளிப்பாடே அவர்தம் படைப்பில் வெளிப்படும். எனவே இரட்டைக் காப்பியங்களில் தத்தம் காப்பியம் சார்ந்த மதத்தை (கருத்தை) வழியுறுத்தவே மிகுதியான கிளைக் கதைகள் படைக்கப்பட்டுள்ளமை புலனாகிறது.

வாசகர் வாசகம் 1

மதிப்புயர் செந்தமிழ் இதழா சாற்கு !

விதிப்படி வணக்கம் சொல்லி, நன்றி மதிப்புடன் தெரிவிக்கின்றேன். இந்த மகிழ் மடல் மூலம் இன்று நன்றே !

"செந்தமிழே" உயிரே நறுந்தேனே
செப்பியபா வேந்தர் பாட்டு
செந்தமிழ் நகராம் மதுரைச்
செந்தமிழ்க்கல் லூரி கண்ட
செந்தமிழ்ச் சங்க இதழ்க்கே
செம்மையாய்ப் பொருந்தும் என்று
செந்தமிழ் உள்ளத் தோடே
"செந்தமிழ்" வாழ்த்தி னேனே !

காரணம் என்ன என்றால்
கருத்துமோ தல்கள் தம்மைக்
காரண மாகக் காட்டிக்
கழித்திடல் இன்றித் தமிழின்
வீரந்தான் அதனால் என்றே
விவேகமாய் வெளியிட எண்ணும்
ஈரமுறும் இதழ்க்குழு வினரை
இதயத்தால் போற்றி னேனே !

தெ. முருகசாமி

அழகு

புலவர் சி. பாண்டுரங்கன், ஆம்பூர்

தாய்த்தமிழ்ச் செம்மொழி மிகுஅழகே !
முருகெனும் சொல்லின் பொருள் ; அழகே !
வாய்க்கோ அழகெது? இன்சொல்லே !
வாய்த்த கருத்துநூல், கரங்களுக்கும்,
ஒழுக்க வழிநடை கால்களுக்கும்,
உதவும் உள்ளம் மனிதனுக்கும்,
வழுக்காது காத்தல் நட்பினுக்கும்,
வருபொருள் பகிர்ந்துணல் வாழ்வினுக்கும் (1)

உணவுப் பயிர்கள் பூமிக்கும்,
உலவுபூந் தென்றல் காற்றினுக்கும்,
கணவாய், நெடுந்தொடர் மலைகளுக்கும்,
கண்ணீர் துடைத்தல் நெஞ்சினுக்கும்,
மழைநீர் சேர்த்தல் மண்ணினுக்கும்,
மடுநீர் நிறைத்திடல் ஆற்றினுக்கும்,
கழைவளர் அடுக்கம் காட்டினுக்கும்,
கடுஞ்சொல் இன்மை தலைமைக்கும் (2)

இருகரை சோலை நதிகளுக்கும்,
இருள்அடர் காடு கடற்கரைக்கும்,
கருவிழி கயல்விழி கன்னிகைக்கும்,
கணம்வீண் செலாமை மாணவர்க்கும்,
கருணை குழைத்துப் பாடத்தைக்
கற்பித் தல்நல் ஆசாற்கும்,
தருநிறை பூங்கா புல்திடல்கள்
தெருதொறும் உளநிலை நகர்களுக்கும் (3)

போக்கும் வரவும் நிறைந்துள்ள
வகைஉள ஊர்திகள் தனிவழியாய்
யார்க்கும் இடர்இலா வகைசெல்ல
யாத்தசா லைதனில் மரநிழலும்,
பார்க்கெலாம் திலகபா ரதநன்னாட்
டார்க்கெலாம் மனம்நிறை நாட்டுபற்றும்,
தேர்க்குள நாற்றிசை உலாவீதி
கோவில் தலமும், அழகு என்போம் ! (4)

திருவள்ளுவரே சிறந்த மருத்துவர்

ஆறுவிரல் ஐம்பொறி

நாம் தண்ணீரை அருந்துகிறோம். உணவை உண்கிறோம். காற்றைச் சுவாசிக்கிறோம். அருந்திய தண்ணீரின் எச்சம் வியர்வையாகவும் சிறுநீராகவும் வெளியேறுகிறது. உண்ட உணவின் எச்சம் மலமாக வெளியேறுகிறது. சுவாசித்த காற்றின் எச்சம் கரியமில வாயுவாக வெளியேறுகிறது. இப்படி வெளியேறுவதை திருவள்ளுவர் நான்கு சொற்களால் குறிப்பிடுகின்றார். அவை. 1. அற்றது, 2. அற்றால், 3. இழிவு, 4. அறல் ஆகும்.

1. அனைவரும் நோயின்றி நீண்ட நாள் வாழவேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காகத் தெய்வப்புலவர் மருந்து என்ற அதிகாரத்தில் அற்றது (நீங்கியது) என்ற சொல்லை இருமுறை பெய்துள்ளார்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். (குறள். 942)

ஒருமுறை உண்டது முற்றிலும் செரித்துவிட்டதா என்பதை அறிந்து மறுமுறை உண்டவர்க்கு மருந்தே வேண்டாம். இஃது இக்குறளின் பொருளாகும்.

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து (குறள் - 944)

முன் உண்ட உணவு செரித்ததை அறிந்து ஒவ்வாத உணவுகளை நீக்கவிட்டு நன்றாகப் பசித்த பின் உண்ண வேண்டும். இஃது இக்குறளின் பொருளாகும். அற்றது என்ற சொல் 365ஆம் எண் குறளிலும் உள்ளது. அற்றது என்ற சொல் திருக்குறளில் மூன்று இடங்களில் மட்டுமே உள்ளது.

2. அற்றால் என்ற சொல்லை அற்றது என்ற பொருளில் ஒரு குறட்பாவில் தெய்வப் புலவர் பகர்ந்துள்ளார்.

அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு (குறள் - 943)

ஆல் - அசை. அற்ற அளவறிந்து ஒரு முறை உண்ட உணவு செரித்த அளவரிந்து உண்டால் நீண்ட நாள் வாழலாம். இஃது இக்குறளின் பொருளாகும்.

3. இழிவு என்ற சொல்லை அற்றது என்ற பொருளில் ஒரு குறட்பாவில் பொய்யாமொழி புகன்றுள்ளார்.

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய். (குறள் - 946)

உண்ட உணவு செரித்ததை அறிந்து உண்பவனிடம் இன்பம் நிலைத்து நிற்கும். உண்ட உணவு செரிக்காதிருக்க மேலும் மேலும் அதிகமாக உண்பவனிடம் நோய் நிலைத்து நிற்கும். இஃது இக்குறளின் பொருளாகும்.

4. அறல் என்ற சொல்லை அற்றது என்ற பொருளில் ஒரு குறட்பாவில் தெய்வப்புலவர் கூறியுள்ளார்.

உணலினும் உண்டது அறல் இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. (குறள் - 1326)

உண்ணுவதை விட உண்டது செரித்தல் இனிது. அதுபோல புணர்தலை விட ஊடல் இனிது. இஃது இக்குறளின் பொருளாகும். மருந்தில் பொழிந்த கருத்தை ஊடல் உவகையில் உவமையாக்கிய தெய்வப் புலவரின் நினைவாற்றலை நினைக்கும் போது உள்ளம் உருகுகிறது.

அற்றது என்ற சொல்லை உணவுக்காக மட்டும் சொல்லியதாக எடுத்துக் கொள்ளாமல் தண்ணீருக்கும் காற்றுக்கும் கூட சொல்லியதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது தெய்வப் புலவரின் உள்ளக் கருத்தாகும்.

நன்றாகப் பசித்து உண்பவர்க்கு நோயில்லை. நீண்ட ஆயுள் உண்டு. பெரிதுண்ணின் நோயளவின்றிப் படும் (947). இக்கருத்துக்கள் எக்காலத்தும் எந்நாட்டவர்க்கும் பொருந்தும். நீண்ட நாள் வாழ்ந்த ஞானிகளும் முனிவர்களும் உண்ணா நோன்பிருந்ததை நாமறிவோம். இன்றும் மருத்துவர்கள் பசித்து உண்க என்று கூறுவதையும் நாமறிவோம். எதிர் காலத்திற்கும் இக்கருத்து பொருந்தும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

வாழ்ந்த மக்களுக்கும் வாழ்கின்ற மக்களுக்கும் வாழப் போகும் மக்களுக்கும் தலை சிறந்த மருத்துவத்தைச் சொன்ன பொய்யாமொழி உலகில் மிகச் சிறந்த மருத்துவராவார். அவர் சொல்வதைக் கேளுங்கள். நீண்ட நாள் நோயின்றி வாழலாம்.

தமிழர் மரபு வழி வேளாண்மை

ப. பாலமுருகன்
அண்ணாமலை நகர்

முன்னோர்கள் உணவினை உற்பத்தி செய்வதற்குப் பல்வேறு வேளாண் செயல்பாடுகளைக் கையாண்டுள்ளனர். ஆரம்பக் காலத்தில் சிறிது சிறிதாக உணவினை உற்பத்தி செய்வதற்கு மட்டும் கற்றுக் கொண்ட பழங்கால மக்கள், காலப் போக்கில் தேவைகள் அதிகமாக ஏற்படவே உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகமாகப் பெறுவதற்கான வழிவகைகளைத் தேடினர். அத்தேவைகளைப் பூர்த்தி செய்ய விளைச்சலைப் பெருக்குவதற்கான சிந்தனைகளில் ஈடுபட்டனர். அச்சிந்தனைகளின் விளைவாக நிலத்தின் தன்மையையும், எவ்வகை நிலத்தில் எவ்வகை உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியும் என்ற அறிவினைப் பெற்றனர். காலப்போக்கில் அவர்களது வேளாண் முயற்சியில் வெற்றியும் கண்டனர். இவர்களது வேளாண்மை எம்முறைகளில் நடைபெற்று வந்துள்ளது என்றும் உழவிற்கான நீர்ப்பயன்பாடுகளை எந்தெந்த முறைகளில் பெற்று வேளாண்மை செய்துள்ளனர் என்றும் எவ்வெவ்வகைப் பயிர்களை உற்பத்தி செய்துள்ளனர் என்றும் அறிந்து அவர்களுக்குப் பின்வந்த மக்கள் அவர்களைத் தொடர்ந்து வழி வழியாக அவர்களிடமிருந்து பெற்ற அனுபவங்களை மரபுகளாகப் பின்பற்றுகின்றனர். இதுவே 'வேளாண் மரபு' எனப்படுகிறது.

இவ்வேளாண் மரபினைப் பற்றிக் கூறும் போது, "வேளாண்மைத் தொழில் தொன்மையான தொழில். இத்தொழில் தொழில்களுக்கெல்லாம் தாய்த்தொழிலாய் விளங்குவது. இயற்கையில் கிடைத்த காய், கனி, கிழங்குகளை உண்டு வாழ்ந்த மனிதர்கள் இயற்கை வளம் குறைந்த போது அவற்றை உண்டாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தாங்கள் வாழ்ந்த பகுதியில் இயற்கைச் சூழலுக்கு ஏற்பத் தங்கட்குத் தெரிந்த அளவில் பயிரிட்டு வந்தனர். கால்நடைகளைப் பழக்கிப் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்தினர். அவற்றிலும் நீர் குறைந்த ஆறும் குளமும் ஏரியும் வற்றிய போது கிணறுகள் தோண்டி நீர்வளம் தேடினர்."

இத்தகு கடின முயற்சிகள் மேற்கண்ட போது விதைத்த பயிரோடு வளரும் களையைக் களைய முற்பட்டனர். பயிர் வளர்ந்து அறுவடைக்கு வரும் வரை அவற்றைப் பாதுகாத்தனர். பலமுறை பயிரிட்டு நிலவளம் குன்றிய போது எருவிட்டுப் பயிர் செய்தனர். பயிர்களை மாற்றிப் பயிர் செய்தனர். இவ்வாறு காலங்காலமாக வேளாண்மைத் தொழில் போற்றப்பட்டு வந்தது. அவற்றுள் நின்று நிலைத்த அனுபவங்களே பிற்கால மக்களால் மரபுகள் என்று போற்றப் பெற்றன என்பர்.

பழங்காலத்திற்குரிய பல்வேறு மரபுகளுள் மிக இன்றியமையாததாகவும், அவசியமானதாகவும் கருதப்பட்ட வேளாண் மரபுகள் சிக்கனமாகவும், சிறப்பாகவும் செயல்பட்டுள்ளன. சுற்றுச் சூழல் அமைப்பிற்குக் கேடுவிளைவிக்காமலும் வேளாண் மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

நிலப் பாகுபாட்டு மரபுகள்

வேளாண்மை செய்வதற்கு அடிப்படையாக அமைவது நிலம். அந்நிலத்தினை மண்ணின் தன்மைக்கேற்ப, இயற்கை அமைப்பிற்கேற்ப நான்கு பிரிவுகளாகப் பிரித்து பண்டைய மக்கள் அந்நாநிலங்களின் தகவலமைப்பிற்கேற்பப் பயிரிட்டு வாழ்ந்துள்ளனர். பழந்தமிழர்களின் வேளாண்மை சார்ந்த நிலவியல் அறிவினையும், அந்நிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்களைப் பற்றியும் தொல்காப்பிய முதற்பொருள் கருப்பொருள்கள் தெளிவுபடுத்துகின்றன.

"முல்லைக் குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

என்ற தொல்காப்பிய நூற்பா பழந்தமிழரின் நாநில மரபைக் குறிப்பிடுகின்றது. இந்நாநில மரபு வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நான்கு பெயர்களுள் காடும் காடு சார்ந்த இடமும் முல்லை, மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி, வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்பது அனைவரும் அறிந்த நிலப்பாகுபாடே. இப்பாகுபாடு வேளாண்மையை மையமிட்டது என்பதை "குறிஞ்சி என்ற மலையும் மலைசார்ந்த நிலப்பகுதி

மலைத்தோட்டம் முதலியவற்றை உள்ளடக்கிய வளவள இயலைச் சுட்டுகின்றது. முல்லை என்ற காடும் காடு சார்ந்த நிலப்பகுதி கால்நடை இயலை விளக்கி நிற்கின்றது. வயலும் வயல் சார்ந்த இடமாகிய மருதம் என்பது வேளாண்மை இயலைக் குறிப்பிடுகின்றது. கடலும் கடல் சார்ந்த இடமாகிய நெய்தல் என்பது மீன்வள இயலை உணர்த்துகின்றது." என்ற விளக்கம் குறிப்பிடுகின்றது.

எனவே பழங்காலத்தில் தமிழர் கொண்டிருந்த நிலப்பாகுபாடு அவர்கள் காலத்தில் வழக்கில் இருந்த வேளாண்மைப் பிரிவுக் கோட்பாட்டை விளக்கம் அளிக்கும் வகையில் எழுந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சி நிலத்தில் காய்கனிகள் கிழங்கு வகைகள் ஆகியவை வேளாண்மை செய்யப்பட்டுள்ளன. இவ்வுணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளும் உடல் உழைப்புகளும் அதிகமாகத் தேவைப்படவில்லை. இயற்கையாகக் கிடைக்கும் நீரான மழைநீரைப் பெற்றும், தேவையான போது சூரிய வெப்பத்தைப் பெற்றும் இந்நிலத்திற்கான உணவுப் பொருள்கள் இயல்பாக விளைகின்றன. எனினும் தினை, வரகு போன்ற மலைப்பகுதியில் விளையும் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதனைச் சங்கப் பாடல்கள் குறிப்பிடும் தினைப்புனம் காத்தல் போன்ற துறைகள் வழி அறியமுடிகின்றது. குறிஞ்சி நிலங்களில் மலை நெல், கம்பு, தினை, வரகு போன்ற பயறு வகைகள் பயிர் செய்யப்பட்டுள்ளன. இவை தற்காலத்தில் மானாவாரிப் பயிர்கள் என்று அழைக்கப்படுகின்றன. குற்றாலக் குறவஞ்சியில்,

"ஆடுமர வீனுமணி கோழவெயில் எரிக்கும்

அம்புலியைக் கவளமென்று தும்பி வழி மறிக்கும்

வேடுவர்கள் தினைவிரைக்க காடுபுனந் தோறும்

குங்குமமுஞ் சந்தனமும் நாறும்"

என்ற பாடல் குறிஞ்சி நிலத்தில் வாழும் உழவர்கள் தினை விதைக்கச் செல்லும் வேளாண் காட்சி காட்டப்படுகின்றது.

முல்லை நிலத்திலும் உணவு உற்பத்திக்கான முயற்சிகள் குறைவே. இந்நிலத்தில் ஆடுமாடுகளாகிய கால்நடை வளர்ப்புகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. உழவுத் தொழில் இவர்கள் முழுவதும் அறிந்த தொழிலாக இல்லை. பால், தயிர், நெய் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதையே இந்நிலமக்கள் வேளாண் மரபாகக் கொண்டு செயல்பட்டுள்ளனர்.

மருத நிலத்தில் முறையான வேளாண்மை செயல்பாடுகள் நடைபெற்றன. நிலத்தினைப் பக்குவப்படுத்தி பருவநிலைகள் அறிந்து வேளாண்மை செய்ய மருதநிலத்தில் தான் மக்கள் கற்றுக் கொண்டனர். பிற நிலங்களுக்கு இல்லாத பெருமை மருத நிலத்திற்கு உழவுத் தொழிலால் ஏற்பட்டது. மருத நில்த்தை நம்பியகப் பொருள் பழனம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றது.

வேளாண்மைத் துறையில் ஒன்றான "மீன் வளர்ப்பு" என்று குறிப்பிடப்படுகின்ற இன்றைய நவீன வேளாண்மைப் பிரிவு தொடக்க காலத்தில் "கடல் வழி மீன் பிடித்தல்" என்ற நெய்தல் சில மக்களின் தொழிலாக இருந்து வந்துள்ளது.

முடிவுரை

இவ்வேளாண் மரபுகள் நிலப்பாகுபாட்டினால் வெளிப்படுகின்றன. பழந்தமிழர்கள் முறைப்படுத்தப்பட்ட, வாழ்வியல் மரபுகளைக் கொண்டிருந்துள்ளனர். பழங்காலத்திற்குரிய பல்வேறு மரபுகளுள் மிக இன்றியமையாததாகவும், அவசியமானதாகவும் கருதப்பட்ட வேளாண் மரபுகள் சிக்கனமாகவும், சிறப்பாகவும் செயல்பட்டுள்ளன. சுற்றுச் சூழல் அமைப்பிற்குக் கேடுவிளைவிக்காமலும் வேளாண் மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

நீதியின் கவனத்திற்கு நீதி நூல்கள்

சா. இளையராஜா

முன்னுரை

மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ வேண்டுமென்றால் நீதிமுறை என்பது விரைவாகவும், ஒருதலைப் பட்சமின்றியும் அமைய வேண்டும் அப்போது தான் ஒரு நாடு சிறப்பாக இயங்க முடியும். எனவே, நீதிநூல்கள் எவ்வாறு நீதிமுறைக் கூறுபவர்களை நெறிப்படுத்துகிறது என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் குறிக்கோளாகும்.

பொய் - உண்மை கண்டறி

ஒருவன் தன் திறமையாலும், மனிதச் செல்வாக்காலும் அழுது, புரண்டு பொய்யை உண்மை போலச் சொல்வான். அவனின் நா வன்மையைக் கேட்கும் போது உண்மைப் போலவே தோன்றும். எனவே உண்மையை ஆராய்ந்து அறிய வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

"பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே" - வெற்றிவேற்கை

என்பதிலிருந்து பொய்யைத் திறம்பட உண்மை போல கூறினாலும் பொய்யைக் கண்டறிய வேண்டும் என்று உணர்த்துகிறது.

உண்மை பேசுகின்ற ஒருவன் தான் சொல்வதைத் திறமையாய்ச் சொல்ல முடியாமல் முன்னுக்குப் பின் முரணாகச் சொல்லித் தவிக்கும் போது, அவன் பேசும் உண்மையும் பொய் போலத் தோன்றும். அதனால், வழக்கை விசாரிப்பவர் எதையும் ஆராய்ந்து உண்மையைக் காண வேண்டும் என்று பின்வருமாறு கூறுகின்றது.

"மெய்உடை ஒருவன் சொலமாட்டாமையால்
பொய்போ லும்மே பொய்பேலா லும்மே" - வெற்றி வேற்கை

இவற்றின் மூலம் உண்மையைக் கூறுபவர்களின் நிலை பொய்போலத் தோன்றினாலும் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று வெளிப்படுத்துகின்றது.

ஆராய்ந்தறி

இருவர் தொடுத்த வழக்கை ஏழுமுறை கேட்டு (பலமுறை கேட்டு) அவர்களின் மனம் ஏற்றுக் கொள்ளும் வகையில் பொருந்த நீதியளிக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், பாதிக்கப்பட்டவர் மனம் வருந்தி அழும் கண்ணீரானது வாள் போன்ற சக்தியுடையது. எனவே, நீதியளித்தவரின் வாழ்வை, சந்ததியை மூன்று கடவுளான அயன், அரன், அரி காப்பாற்றினாலும், அழித்துவிடும் என்பதைப் பின்வரும் பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.

"இருவர்தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையார் ஆயின்
மனுநெறி முறையின் வழக்கிழந் தவர்தாம்
மனம்உற மறுகின்று அழுத கண்ணீர்
முறைஉறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாள் ஆகும்மே" – வெற்றி வேற்கை

என்ற பாடலடிகள், பலமுறை ஆராய்ந்தறிந்து நீதி வழங்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

அநியாயத்திற்குத் துணை நிற்காதே

பணத்திற்காகவும், ஆதிக்கத்திற்கும் ஆட்படாமல் நேர்மையாக நீதியளிக்க வேண்டும் என்று உலகநீதி உணர்த்துகின்றது.

"கணக்கழிவை யொருநாளும் பேசவேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்"

என்ற வரிகள், நியாயத்திற்கு விரோதமாகவும் அநியாயத்திற்குத் துணையாகவும் வழக்குப் பேசித் தவறான தீர்ப்பைத் தரக்கூடாது என்று வலியுறுத்துகின்றன.

வீடும் - வாழ்வும் கெட்டழியும்

நீதிமன்றத்தில் ஒருதலையாக வழக்குப் பேசி அநீதிக்காகத் துணைநின்று நீதி சொன்னவர்களுடைய வீட்டில் ; பேய்கள் சேரும், வெள்ளெருக்கஞ்செடி பூக்கும், பாதாள மூலி என்னுங்கொடி முளைத்துப் படரும், மூதேவி சென்று தங்குவாள், பாம்புகள் புகுந்து வாழும். இவ்வாறு, அவர்களுடைய வீடு பலவிதத்திலும் பாழடையும் என்று பின்வரும் பாடலடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

"வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே – மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை" – நல்வழி

என்பதின் மூலம் தவறாக நீதி சொன்னால், அநியாயத்திற்குத் துணை நின்றால் அவர்களுடைய வீடு பாழடையும் என்று குறிப்பிடுகின்றது.

வழக்காளர்களின் வழக்குகளைக் கேட்டு ஒருதலைப் பட்சமாகத் தீர்ப்புச் சொன்னால், அவர்களுடைய சுற்றம் அழிந்து, வாழ்வு அழிந்து, கண்ணிரண்டும் குருடாகி இன்பமின்றி கலங்கித் தவிப்பார்கள் என்பதை

"ஒரமே சொல்வாராகில் ஓங்கிய கிளையும் மாண்டு
தீரவே கண்(கள்) இரண்டும் தெரியாது – போவர்தாமே"

என்று விவேகசிந்தாமணி குறிப்பிடுகின்றது.

இவற்றின் வழி அநியாயத்திற்காகத் துணை நின்றால் வீடும், வாழ்வும் கெட்டழியும் என்பதைக் காணலாம்.

நீதி தவாறதே

உண்மையான நீதிமான்கள் ஏழை எளிய பெண்கள் தொடுத்த வழக்கானாலும் அதன் நியாயம் அறிந்து, நடுவு நிலைமை தவறாது தீர்ப்புச் சொல்வார்கள். அப்படிப்பட்டவர்களின் செல்வமும் வாழ்வும் ஏரிநீர் போல பரந்து பெருகி எல்லார்க்கும் உதவும். இந்த மண்ணக மக்களுக்கு இருகண்

எனப் புகழோடு வாழ்வார்கள் என்பதை, விவேக சிந்தாமணி உணர்த்துகிறது.

"நாரிகள் வழக்கதாயினும் நடு அறிந்துரைப்பார் சுத்தர்

ஏரிபோல் பெருகி மண்மேல் இருகனும் விளங்கிட வாழ்வார்"

இவற்றின் வழி நீதி தவறாத நீதிமான்களுக்குப் பலவகையிலும் புகழ் தேடிவரும் என்று குறிப்பிடுகின்றது.

முடிவுரை

ஏழை, பணக்காரன், உறவினன், நண்பன், அரசியல்வாதி என்று பாராமல் நடுவுநிலையோடு ஆராய்ந்து நீதி சொல்பவர்களின் வாழ்வு சிறந்து விளங்கும். அப்படி இல்லாமல் அநீதிக்குத் துணை நின்றால் அவர்களின் வாழ்வும், சந்ததியும், வீடும் அழிந்து நாசமாகிவிடும் என்று நீதிநூல்கள் சாடுவதை அறியலாம்.

வாசகர் வாசகம் (2)

செம்பொன்னாடை

பறவை, உடம்படு மெய்கள், வள்ளலார்,
அறஞ்ந் திணை, தோழி: அறனிலன்னை! சத்தி,
அறநூல் மகுடம் அழகுத் திருக்குறள்,
செறிவுறு இலக்கியப் பாவொடு பின்னிய,
சிறப்புகட் டுரைஎலாம், செம்பொன்னாடை!
அறவிளக் குவமை அழகுசெய் கல்விச்
சிறப்புசொல் பாவும், சீர்சேர் உயர்வே!
பிறளை உண்ணீர், குறையினும் வற்றினும்,
செறிமலை சார்நிறை கல்சுனை ஊற்று போல்,
செறிநீர்க் கொடைமதிழ், செந்தமிழ் வாழிய!

அன்புடன்,
புலவர் சி. பாண்டுரங்கன், ஆம்பூர்

கள்ளனுக்கு உதவிய வள்ளல்பெருமான்!

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

வாடுகின்ற பயிர்கண்டே வாடி நின்ற
வள்ளல்பிரான் வரலாற்றில் ஈதோர் காதை !
நாடி அவர் மேற்கொண்ட பயணம் ஒன்றில்
நள்ளிரவு வந்ததனால், களைப்பைப் போக்கத்
தேடிஒரு சத்திரத்துத் திண்ணை மீது
செம்மல் அவர் உறங்கிவிட்டார்; கும்மி ருட்டில்
கேடுகெட்ட ஒரு திருடன் அருகில் வந்தான்;
கிடைக்காதா ஏதேனும்? என்றே ஆய்ந்தான் !

எப்போதோ அவர்பெற்றோர் செவியில் போட்ட
எழிற்கடுக்கன் பளிச்சென்று மின்னக் கண்டே
அப்படியே பக்குவமாய்க் கழற்றிக் கொண்டான்;
அத்தனையும் விழிமூடி அறிந்த வள்ளல்,
தப்பிழைக்கும் அவனுக்கும் உதவ வேண்டித்
தன்தலையை மறுபக்கம் திருப்ப, அன்னோன்
ஒப்புரவுப் பேரிமயம் அணிந்தி ருந்த
உயர்கடுக்கன் மற்றதையும் பறித்தெ டுத்தான் !

அத்திருடன் மெதுவாக நழுவும் போதில்,
அண்ணல்அவர் குரல்கொடுத்தார், அப்பா ! நீயும்
வைத்திருக்கும் என் நகைகள் சொக்கத் தங்கம்;
விலைகுறைத்து விற்காதே ! அதுவு மின்றி
இத்தினம்நீ ஒரேகடுக்கன் விற்கப் போனால்,
எல்லோர்க்கும் ஐயம்எழும்; அதனால் நானும்
மொத்தமிங்கே இணையாகத் தந்தேன் ! என்றார்.
முகம்வெட்கித் தலைகுனிந்தான் திருட்டுப் பாவி !

தமிழ் – ஆங்கில உடம்படுமெய் கருத்துப் பரிமாற்றத் தொடர்ச்சி

தமிழாகரர் தெ. முருகசாமி
புதுச்சேரி – 9

மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ் இதழில் 2012 செப்டம்பர்த் திங்கள் தொடங்கித் திங்கள் தோறும் தொடரும் தமிழ் – ஆங்கில உடம்படுமெய் பற்றிய கருத்துப் பரிமாற்றத்தில் நவம்பர் இதழில் திரு. வெ. பெருமாள் சாமி அவர்கள் பொதுவாக நான் ஒப்பீட்டுக் கொள்கைக்கு எதிரானவன் போல எழுதியிருந்தார்கள். அஃது உண்மையன்று. உடம்படுமெய் தொடர்பான அந்த ஒப்பீடு தான் அடிப்படை முரண் உடையது, வலிந்து கூறப்படுவது என்பதாக அக்டோபர் இதழில் எழுதியிருந்தேன்.

கட்டுரையாளர் நவம்பர் இதழில் ஆங்கிலத்தில் உடம்படு மெய்க்கான இலக்கணம் இல்லை என ஒப்புக் கொண்டமைக்கு நன்றி. மேலும் தமிழில் இரு சொற்கள் சேரும் போது கேட்பொலியாலும் வரிவடிவாலும் துல்லியமாக உணரும் உடம்படு மெய் போல ஆங்கிலத்தில் ஒருசேரக் காண முடியாதென்பதை எழுதியமைக்கும் நன்றி. இரு சொற்புணர்வின்றி ஒரு சொல்லுக்குள் ஒலியால் மட்டும் ஆங்கிலத்தில் உணரத் தகும் உடம்படு மெய்யை உணரலாம் எனக் கூறுவது ஆங்கில மொழி உச்சரிப்பைத் தமிழ் வழி நாம் உச்சரிப்பதால் உணரப்படுவதன்றி உண்மையில் ஆங்கில மொழி உச்சரிப்பின்படி நம்மது உள்ளதா என அறிதல் அரிதே எனலாம்.

Lorry என்பதை லாரி என்கிறோம். மலாய், சிங்கப்பூர்த் தமிழர்கள் கூட லோரி என்று தான் கூறுகின்றனர். சூடான காப்பியைக் கோப்பி என்றுதான் ஆங்கிலேயர் கூறுகின்றனர். எனவேதான் அந்தந்த மொழிக் காரர்களின் உச்சரிப்பையே உண்மை என்பதால் ஒவ்வொரு மொழி உச்சரிப்பும் அந்தந்த உச்சரிப்பும் அந்தந்த எழுத்துக்களின் சார்பைப் பொறுத்தே அமையும். அதனைப் பொதுமைப்படுத்தி இன்னொரு மொழியுடன் ஒப்பிடல் சால்பன்று என அக்டோபர் இதழில் எழுதியிருந்தேன். கட்டுரையாளர் சொற்புணர்ச்சி ஆங்கிலத்தில் இல்லை என ஒப்புக் கொண்டாலும் ஒரு சொல்லுக்குள்ளேயே காட்டும் உடம்படு மெய் பற்றிய கருத்து முழுமையானதாக இல்லை. எடுத்துக்காட்டாக, TIE + ING புணர்ப்பில் உருவாகும் TYING என்ற

சொல்லில் என்ற எழுத்துக்கள் அப்படியே நிற்காமல் என TY மாறிவிட்டன. TIE - துணி, கட்டு போன்ற பொருள் உடைமை போல TYக்கும் அவையே பொருள்களா? மேலும் TIEயுடன் ING என்ற விகுதி அல்லது பின்னொட்டு சேரும் போது TIE தன் வடிவை TY என மாற்றிக் கொள்வது போல் தமிழில் கட்டுரையாளர் காட்டும் போயினான் என்ற சொற்புணர்ச்சியில் மாறவில்லை என்பது தானே தமிழுக்கும் ஆங்கிலத்திற்குமான வேறுபாடு. ஆங்கிலத்தில் ஒலிப்பன்றி, பொருளும் வடிவமும் மாறிவிடும் நிலையில் எப்படி ஒப்பீடாகும்?

போ + இன் + ஆன் = போயினான், மாற்றம் இல்லை.

TIE + ING : TIEING என ஆகாமல் TYING ஆனது என்றால் மாற்றம் தானே. இது ஆங்கில மொழியில் பாங்கு என்பதால் ஒப்பிடல் வலிந்த ஒன்றன்றோ ! TIEக்கு உள்ள பொருள் TYக்கு இல்லை எனத் தெளிவாகும்போது வலிந்து சுற்றுவதாகவே உள்ளதன்றோ? இந்த அடிப்படையில் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்ற நூற்பாப் பொருள் TIE போல் TY க்கு உண்டா? TYயை TIE ஆக நினைத்துக் கொண்டு பொருள் காண வேண்டுமா? ஆம் என்றால் சரியாக வலிந்து கூறுவதன்றி இயல்பன்று என்பதே உண்மை எனலாம். மேலும் கட்டுரையாளர் செப்டம்பர் இதழில் பக்கம் 11ல் ஒரு சொல்லுக்குள் இரண்டு உயிர்கள் வருகின்றன; மூன்று கூடத் தொடர்ந்து வரும் என்பதற்குக் காட்டப்பட்ட COURAGEOUS என்ற சொல்லுக்குள் அவர் கூறும் உண்மை எந்த அளவில் பொருந்தியுள்ளது எனத்தெரியவில்லை.

COURAGEOUS என்ற சொல்லில் ஆறு உயிர்கள் உள்ளன. 2O, 2U, 1A, 1E இரண்டு O, இரண்டு U என்பதை O மற்றும் U என ஒவ்வொன்றாகக் கொண்டால் நான்கு உயிர்கள் எனலாம். ஒரு சொல்லில் எத்தனை உயிர் எழுத்துக்கள் வருகின்றன என்பது பற்றிய கருத்து, உயிரோடு உயிர் சேர்தற்குக் காட்டி வரும் தொடர்ச்சியில் பொருத்தந்தானா? அல்லது இந்தக் கருத்துக்கான பொருள் தொடர்ச்சி எதைக் கருதியது என்பதும் புரியாத புதிராக உள்ளதால் ஐயத்தில் மேல் ஐயம் எழுகின்றதன்றோ?

ஆங்கிலத்தில் உயிரெழுத்துப் பற்றாக்குறை எனச் சமாதானம் கூறினாலும் ஒலிப்பால் மட்டும் உடம்படு மெய் அறிதலிலும் நிறைவில்லாததால் இந்த ஒப்பீடு வலிந்து கூறப்படுவதன்றி இயல்பானதன்றாம் எனலாம்.

வாசகர் வாசகம் ③

பொங்கல் வாழ்த்து

மார்கழிதான் விடைபெறவே தையாம் பெண்ணாள்
மாண்புறவே புத்தாண்டாய் மலருகின்றாள்
பார்போற்றும் தைமுதலாம் நல்ல நாளில்
படியளக்கும் ஏருழவன் நெல்ல றுத்தான்
சீர்வரிசை மஞ்சளிஞ்சி கதலி கன்னல்
செப்பமுறப் புத்தரிசி புதிய பானை
வார்ப்படத்தில் வெல்லம்நெய்ப் பாலும் பொங்கும்
வளமார்ந்த தமிழ்த்திருநாள் பொங்கல் வாழ்க!

அன்புடன்,
பா. அறிவரசன், திருலோக்கி

வாசகர் வாசகம் ④

பேரன்புசால் செந்தமிழ் ஆசிரியர் அய்யா,

அவர்களுக்கு வணக்கம். பேராசான் பெருமாள் சாமியின் தமிழ் ஆங்கில உடம்படு மெய்களின் மீள் பார்வையில் ஒரு தெளிவு பிறந்தது. திருக்குறளைப் படித்தால் மட்டும் போதாது. அதன் ஆழ, அகல, அடித்தள நோக்கும் உண்மையும் அறிதல் வேண்டும் எனும் முனைவர் அரங்கசாமியின் அறிவூட்டலில் தமிழே உலகின் மூத்த முதன் மொழி, தமிழ் மக்களே உலகின் மூத்த குடிமகள் என்ற உண்மையும் புலப்பட்டது.

இந்து சமயத்தில் மூடநம்பிக்கைகள் வழிந்தோடுவது போன்றே இசுலாத்திலும் அவை கோலோச்சிக் கொடிகட்டிப் பறப்பதை மாலினி நன்கு படம் பிடித்திருந்தார். நற்றிணையில் வரும் வண்ணச் சிறப்பை தொல்காப்பியரின் 'வண்ணம் தானே நாலைந்தென்ப' எனும் கூற்றை முன்வைத்து அது எழுத்து, சொல், தொடை, ஓசை, நடை அடிப்படையில் அமைகிறதென்பதை ஸ்ரீதேவி விளக்கியிருந்தமை வெகு சிறப்பு. சீவகசிந்தாமணியின் காலத்தில் நடைமுறையிலிருந்த சகுனம், சடங்குகள், புள் நிமித்தம், கண் நிமித்தம் பற்றிய செய்திகளைக் கனிமொழி இனிக்கும் தேனாய் வழிய விட்டிருந்தார்.

அன்புடன்,
புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி

குறுந்தொகையில் மன்னர்கள்

து. அசோகன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

முன்னுரை

மனித மனங்களைப் பக்குவப்படுத்தி, மனிதர்களாக வாழ்வாங்கு வாழச் செய்யும் உயரிய பண்புகள் நிரம்பியவை சங்க இலக்கியங்கள் என்று கூறும் அளவிற்குக் கருத்தாழம் மிக்க பெட்டமாகத் திகழ்கிறது. பொதுவாக இலக்கியங்கள், தோன்றும் காலத்தில் வாழும் மக்களின் மனங்களைப் படம் பிடித்து காட்டுகின்றன. அந்த வகையில் சங்க கால இலக்கியங்கள் அன்றைய மக்களின் வாழ்வையும், மனங்களையும் நிழல் படமாக்கி நம் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. சங்க காலம் ஒரு பொற்காலம் என்று கூறினும் அது மிகையன்று.

சங்க இலக்கியங்களைப் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்தவர்கள் பலர். அந்த வகையில் சங்க இலக்கியங்களுள் ஒன்றான எட்டுத் தொகையுள், நல்ல என்ற அடைமொழியுடன் சிறப்பாகக் குறிக்கப் பெறும் குறுந்தொகையில் "குறுந்தொகையில் மன்னர்கள்" என்னும் தலைப்பில் அமைந்த இக்கட்டுரை குறுந்தொகை வழிநின்று காவலராக மட்டுமின்றிப் பாவலராகத் திகழ்ந்த மன்னர்களையும் அவர்களின் கவிதிறனையும் எடுத்துரைப்பதையே நோக்கமாகக் கொண்டு வரையப்பெற்றுள்ளது.

குறுந்தொகையில் மன்னர்கள்

அகச் செய்திகளை உள்ளடக்கிய 401 பாடல்களைக் கொண்ட குறுந்தொகையில் மொத்தம் 205 புலவர்கள் பாடல் இயற்றியுள்ளனர் அவர்களுள் நாடாண்ட மன்னர்களாக, சிற்றரசர்களாக விளங்கிய அழிசிநச்சாத்தனார், அறிவுடைநம்பி, ஆரிய அரசன், யாழ்ப்பிரமத்தனார்,

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.பில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 December 2012 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

[தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

From

SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.